<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 8வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் திரு.விஜய் ஆனந்த் தம்பையா | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2011 அன்று அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்த போது கடலூர் மத்திய சிறை சாலையிலிருந்து போலிசாரால் சுரேஷ் என்பவரை அழைத்துவரப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் – உடலில் பல இடங்களில் கன்னிய காயங்கள் இருந்தது. அவருடைய நாடித்துடிப்பு 70 ஆக இருந்தது. 120/70 இரத்த அழுத்தம் இருந்தது. இடது கால் முட்டியில் கன்னிய காயம் இருந்தது. இடது தோள்பட்டையில் கன்னிய காயம் இருந்தது. இடது மார்பு பகுதியின் மேல்பரப்பில் கன்னிய காயம் காணப்பட்டது. அவருக்கு உடலில் நடுக்கம் அவருக்கு இருந்த மதுப்பழக்கத்தினை சமீபத்தில் விட்டதால் இருந்ததை கண்டறிந்து அவருக்கு அதற்கான சிகிச்சை அளித்தேன்.

மேலும், இடது கால் முட்டியில் வலி இருந்ததை கண்டறிந்து அதற்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்து அவரை மேலும் சிகிச்சைக்காக பணி மருத்துவரிடமும், எலும்பு சிகிச்சை மருத்துவரிடமும் பரிந்துரை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் 04.03.2011 இரவு 7.30 மணி முதல் 05.03.2011 காலை 7.30 மணி வரை இரவு அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்தேன். போலிசார் எதிரியை அடைப்பு காவலுக்கு உட்படுத்தும் போது எங்களில் Fitness Certificate வாங்கி செல்வார்கள் என்றால் சரிதான். 04.03.2011 இரவு ஜெயிலில் அடைப்பதற்கு முன் Fitness Certificate வாங்கினார்களா என்று ஞாபகமில்லை. Fitness Certificate கொடுப்பதற்கு முன்பு கைதியை நாங்கள் பார்த்து விசாரித்து திருப்தி அடைந்தால் Fitness Certificate கொடுப்போம் என்றால் சரிதான். ஆல்கஹால் வித்திராயல் சிம்டம் இருப்பவர் வித்தியசமாக நடப்பார் என்றால் ஆமாம். அது போன்ற சமயத்தில் உயர் இரத்த அழுத்தம் இருக்கும் என்றால் சில சமயங்களில் வாய்ப்பு உண்டு. சில சமயங்களில் இதய பாதிப்பும் வரும் என்றால் வாய்ப்பு உண்டு. நான் பணி மருத்துவரிடம் ஒப்படைத்த பிறகு அவர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது. மருத்துவமனையில் Fitness Certificate வாங்கியதற்கான அறிக்கை இருக்கும். நான் வழங்கிய ஆவணமும் causality ward ல் இருக்கும்.

**3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 9வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணவேணி | வயது | : | 63 |
| தந்தை/கணவர் பெயர் | : | கருணாநிதி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–** நான் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 04.03.2011 அன்று இரவு 7.00 மணிமுதல் 05.03.2011 காலை 7.00 மணி வரை பணியில் இருந்தேன். 05.03.2011 காலையில் நான் கார்விட்ச் வார்டில் இருந்த போது ரோட்டினை கடந்து 6.00 மணியளவில் போலிசார் அழைத்து வந்தார்கள். நாங்கள் மருத்துவர் பரிந்துரை செய்த சிகிச்சையை அளித்தோம். எக்ஸ்ரே எடுத்தோம், இரத்த பரிசோதனை எடுத்தோம். வலி நிவாரணி எழுதியிருந்தார். அதன் படி வலிக்கு மருந்து கொடுத்தேன். அவர் பெயர் சுரேஷ் என்று கூறினார். கிராமத்திலிருந்து வருவதாகவும் வலிக்கிறது என்றும் சொன்னார். ஊசி போட்டவுடன் நானே அழைத்து சென்று அட்மிஷன் போட்டேன். காலை 6.30 மணிக்கு கிச்சனிலிருந்து டயட் சாட் வரும். சுரேஷ்க்கும் டயட் 2 இட்லி கொடுத்தோம். அவர் சாப்பிடவில்லை. பிரஷ் செய்துவிட்டு சாப்பிடுவதாக சொன்னார்.

காலை 7.00 மணிக்கு என்னை விடுவிக்க வந்த நர்ச்சிடம் கேஸ்ஷீட் மற்றும் சுரேஷ் ஒப்படைத்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். கோட்டாட்சியர் மற்றும் நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பணி முடிந்து சென்ற போது சுரேஷ் நல்ல நிலையில் தான் இருந்தார்.

**3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 10 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புனிதவள்ளி | வயது | : | 62 |
| தந்தை/கணவர் பெயர் | : | பாஸ்கர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 05.03.2011 அன்று மதியம் 1.00 முதல் இரவு 7.00 மணி வரை பணி நேரம். அப்போது டையாரியா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த போது கார்விட்ச் வார்டிலிருந்து இரண்டு போலிசார் வந்து சுரேஷ் என்பவரை வந்து பாருங்கள் பேச்சு மூச்சு இல்லாமல் இருக்கிறார் என்று கூறினார்கள். நான் உடனே வார்டுக்கு சென்று பார்த்த போது சுரேஷ் சுயநினைவின்றி இறந்து கிடந்தார். உடனே RMO அவருக்கு போன் செய்து தகவல் தெரிவித்தேன். அன்று பணி மருத்துவராக இருந்த மருத்துவர் ராமலிங்கம் என்பவருக்குபோன் மூலம் தெரிவித்தேன். அவரும் RMO ம் உடனே வந்து டமாக வந்து அவரை பார்த்துவிட்டு Death Certificate செய்து பிணவறைக்கு அனுப்பிவிட்டனர்.

இது சம்பந்தமாக மருத்துவமனை வெளிப்புற காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்கள். அன்றைய தேதியிலேயே 4.00 மணியளவில் கோட்டாட்சியர் அவர்களும், நீதித்துறை நடுவர் அவர்களும் நேரில் வந்து என்னை விசாரித்தார்கள். நான் நடந்த அனைத்தையும் தற்போது கூறியுள்ளவாறே அன்றும் கூறினேன்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 11வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமலிங்கம் | வயது | : | 71 |
| தந்தை/கணவர் பெயர் | : | வைத்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணிபுரிந்து 2012 ல் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 05.03.2011 அன்று நான் பணிலிருந்து போது மதியம் 1.45 மணியளவில் சுரேஷ் த/பெ. முத்துகிருஷ்ணன் என்பவரை வார்டில் வைத்து பார்வையிட்டு அவர் இறந்துவிட்டார் என்பதை உறுதி செய்து சான்றிதழ் அளித்தேன். அவர் மாரடைப்பாலும், சுவாச நிறுத்தத்தினாலும் இறந்ததாக சான்று அளித்தேன். நீதித்துறை நடுவர் அவர்கள் நேரில் வந்து என்னை விசாரித்தார். நான் நடந்ததை கூறினேன்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

சுரேஷ் இறப்பு குறித்து மாரடைப்பாலும், சுவாச நிறுத்தத்தினாலும் இறந்ததாக சான்று அளித்தேன் அது மருத்துவமனையில் இருக்கும் என்றால் சரிதான்.

**3, 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**